02.06.2022
CC 105/2017
PW4 Magarajan
**எதிரி தரப்பில் தரப்பில் கு.வி:**

நான் வழக்கறிஞர் தொழில் செய்துவருகின்றேன். நான் திருநகர் பாண்டியன் நகரில் குடியிருந்து வருகின்றேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் ஹார்விபட்டி சமுதாயம் கூடம் செல்லும் வழியில் உள்ளது என்றால் பல வழிகளில் இதுவும் ஒன்று. சமுதாயக்கூடம் கிழமேல் ரோட்டில் தெற்கு பார்த்து உள்ளது என்றால் சரிதான். சமுதாயக்கூடத்திலிருந்து வடக்கு நோக்கி செல்லும் பாதையில் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மண்டல அலுவலகம் உள்ளது என்றால் அந்த சாலை கிழ மேல் சாலை அதில் உள்ளது. பரசுராமன் கடை சமுதாயக்கூடத்தின் மேற்கே இருக்கிறது என்று சொன்னால் சரிதான். ரோட்டிற்கு தெற்கே உள்ளது. பரசுராமன் கடையின் முன்பு தான் சம்பவம் நடந்தது. கடையின் வடக்குப்பகுதியின சுமார் 30 அடி தூரத்தில் சம்பவம் நடந்தது என்றால் சரியல்ல. சம்பவ இடத்தின் மேற்குப்பகுதியில் வீடுகள் உள்ளன கிழக்குப்பகுதியில் வீடுகள் இல்லை என்று சொன்னால் எனக்கு ஞாபகம் இல்லை. எனது முதல் விசாரணையில் எனது நண்பரை பார்க்க போவதாக சொல்லிவிட்டு நண்பரின் பெயரை குறிப்பிடவில்லை என்றால் வழக்கிற்கு சம்பந்தம் இல்லை என்பதால் சொல்லவில்லை. மதன்குமார் என்பவர் திருநகர் காவல் நிலையத்திற்கு எதிர்புறம் ஜெராக்ஸ் கடை வைத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. அவரை எனக்கு சம்பவத்திற்கு முன்பிருந்தே தெரியும். அந்த ஏரியாவில் இருப்பதால் தெரியும். எனது முதல் விசாரணையில் சங்கீதா என்ற பெயர் கொண்ட தண்ணீர் விநிநோகம் செய்யும் லாரி பதிவு எண் டிஎன் 55 இ 5557 என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அது டிராக்டர் ஆகும். நான் ஏற்கனவே தண்ணீர் லாரி என்று சொல்லிவிட்டு தற்போது வழக்கிற்காக மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு டிராக்டருக்கும் லாரிக்கும் வித்தியாசம் தெரியுமா என்றால் தெரியும். சம்பவம் நடந்த சாலை சுமார் 20 அடி அகலம் உள்ளது என்றால் சரிதான். 10 அடி அகலம் உள்ள சாலையை வழக்கிற்காக பொய்யாக சொல்கின்றேன் என்றால் சரியல்ல. விபத்திற்குள்ளான வாகனத்தை ஓட்டிவந்தவர் சம்பவத்திற்கு பின்பு அங்கு இருந்தாரா ஓடிவிட்டாரா என்றால் நான் கவனிக்கவில்லை. அதனால் எனக்கு எதிரியை குறித்து தெரியாது என்றால் சரியல்ல. எதிரியை தெரியும். டிராக்டர் இருசக்கரவாகனத்தின் முன்பக்கமாக மோதியது என்றால் சரிதான். காயம்பட்ட மதன்குமார் ரோட்டிற்கு தெற்கேயும் ரேவதி வடக்குப்பக்கமும் விழுந்துவிட்டார்கள் என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திலேயே இல்லை என்றும் மதன்குமார் வேண்டப்பட்ட நபர் என்பதாலும் நான் வழக்கறிஞராக இருப்பதாலும் பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. எதிரியை எனக்குத் தெரியாது என்றும் வழக்கிற்காக தெரியும் என்று சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

P SHUNMUGA RAJ

Digitally signed by P SHUNMUGA RAJ
Date: 2022.06.02 17:56:19 +0530